**சுருக்கம்**

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – 2010–2011ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டம் – திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மற்றும் கிராமத்தில் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைத்தல் – நபார்டு வங்கி ஆர்ஐடிஎப் XVI–ன் கீழ் நிதி உதவியுடன் ரூபாய் 8.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (டபிள்யூ1) துறை**

அரசாணை (நிலை) எண் 365

நாள்: 10.12.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
கார்த்திகை 24

படிக்க:

1 தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களின் கடித எண். B/1933/ 2010 நாள் 21.7. 2010.
2 பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை கடித எண் NB(TN) SPD/98/RIDF - XVI(Tamil Nadu)/111/PSC/ 2010-11, நாள் 31.8.2010

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2010–2011–ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் போது திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மற்றும் கிராமத்தில் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைத்தல் திட்டத்தை ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

2. சட்டமன்றப் பேரவையில் மாண்மிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையிலும், இத்திட்டத்தின் அவசியம் மற்றும் அவசரத்தை முன்னிட்டும், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மற்றும் கிராமத்தில் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைத்தல் திட்ட மதிப்பீட்டினைரூ.8.50 கோடி (2010–2011 ஆம் ஆண்டு விலை விவரப்படி) தயாரித்து நீர்வள ஆதாரத்துறை தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பியிருந்தார். மேற்காணும் இத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் நிதி உதவி வேண்டி நபார்டு வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

3. திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மற்றும் கிராமத்தில் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைத்தல் திட்டத்திற்கு நபார்டு வங்கி ஆர்ஐடிஎப் XVI (RIDF-XVI) (ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவி திட்டம் 16) –ன் கீழ் கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ரூ. 8.50 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியால் வழங்கும் கடனுதவி ரூ.807.50 இலட்சம்போக மீதித்தொகை ரூ. 42.50 இலட்சம் மாநில அரசால் வழங்கப்படும்.

**4.** மேற்கூறிய நிலையில், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மற்றும் கிராமத்தில் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாயை புனரமைத்தல் திட்டத்திற்கு ரூ.8.50 கோடி (ரூபாய் எட்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடுகிறது. இச்செலவினத்தில் ரூ. 807.50 இலட்சம் (ரூபாய் எண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நபார்டு வங்கியின் நிதியுதவி ஆர்.ஐ.டி.எப். XVI (Rural Infrastructure Development Fund XVI) (ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவி திட்டம் 16) கீழ் கடனாகப் பெறவும், மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.42.50 இலட்சம் (ரூபாய் நாற்பத்திரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கவும் அரசு அனுமதித்து ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண்.40–01–ன் கீழ் புதிதாக துவக்கப்பட்ட கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

"4701 – பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு–03–நடுத்தர பாசனம்–வணிகத்தன்மை வாய்ந்தது–345 நடுத்தர பாசனத் திட்டங்கள்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத்திட்டம்–JL ஊரக அடிப்படை வசதி, மேம்பாட்டு நிதியுதவி திட்டம் 16ன் கீழ் நபார்டு வங்கி கடனுதவியுடன் திண்டுக்கல் ஆத்தூர் அணைக்கட்டு கால்வாய் புணரமைத்தல்–16 பெரும்பணிகள்– (கு.தொ.கு. 4701–03–345–JL 16: 07) "

**6.** மேலே பத்தி 5ல் துவக்கப் பெற்ற புதிய கணக்குத் தலைப்பிற்கு முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் மதிப்பீடு, கட்டுப்பாடு மற்றும் கணக்கு நேரமைப்பு அலுவலர் ஆவார்.

**7.** மேலே பத்தி 5இல் துவக்கப் பெற்றுள்ள கணக்குத் தலைப்பினை தங்களது பதிவேடுகளில் தொடங்குமாறு சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணி (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2010–2011ல் (Supplementary Estimates 2010-2011) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–I ) த்துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ. சா. எண் 66962 / பொப–II / 2010, நாள் 02.12.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1445 (ஆயிரத்து நானூற்று நாற்பத்து ஐந்து)–டன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி. தனவேல்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை.
தலைமைப் பொறியாளர் கட்டுமான ஆதாரம், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை –18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை–18.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல்.
மாவட்ட கருவூல அலுவலர், திண்டுக்கல்.
பொது மேலாளர், நபார்டு வங்கி, (சென்னை மண்டலம்), 105, 106, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 34.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
செயலாளரின் தனிச்செயலாளர், பொது பணித்துறை, சென்னை–9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
நிதி (பொ.ப.II) / வ.செ.(பொ.I) / வ.செ.(பொ.II/(நி.ஆ.II)துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறையில் உள்ள பாசனப் பிரிவுகள்.
இ.கோ/ உ.ந

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

**பிரிவு அலுவலர்**